விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 169 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 23 சனிக்கிழமை (06.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





# வடக்கை வந்தடைந்த பாரிய சூரியக்கலங்கள்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் பகல் நேரங்களில் சூரிய சக்தி மூலம் தேவைக்கு அதிக மாக உற்பத்தியாகும் மின்சாரத்தை சேமித்து இரவு நேரங்களில் பயன் படுத்தும் நோக்கில் அரசாங்கத்தால் நிறுவப்படவுள்ள பாரியளவிலான மின் சேமிப்புக் கலங்கள் 15ஆம் பக்கம் பார்க்க



# கிளி.பாடகர் கைது
## சீமான் கண்டனம்



(சென்னை)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஈழத்துப் பாடகரை இலங்கை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறி க் கை யில், 15ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி மனிதப் புதைகுழி
## நேற்றும் 11 என்புத் தொகுதிகள் மீட்பு
### இதில் 3 சிறுவருடையது

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மூன்று சிறுவர் களுடைய என்புக்கூட்டுத் தொகுதி யுடன் 11 என்புக்கூட்டுத் தொகுதி கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)



## ஹொரணை தீ விபத்தில்
# மரணித்தோர் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்தது

(களுத்துறை)

ஹொரணை - அங்குருவாதொட்ட, பட்டகொட பகுதியில் அமைந்துள்ள 'செனஹஸே கெதெல்ல' முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் தீக்காயங்களுக் 15ஆம் பக்கம் பார்க்க

# உரமானியத் தொகை
## 5,000 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் ஒரு ஹெக்டேயருக்காக வழங்கப்படும் உரமானியத் தொகை 5,000 ரூபா வால் அதிகரிக்கப்பட்டுள்ளது என விவசாய அபி விருத்தி ஆணையாளர் நாயகம் தம்மிக ரண துங்க தெரிவித்துள்ளார்.

அ ர சா ங் க த் தகவல் 15ஆம் பக்கம் பார்க்க

# அதிபர் சேவை - III போட்டிப் பரீட்சை நாளை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் விண்ணப்பம் கோரப் பட்ட இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்திற்கான ஆட்சேர்ப்புக்கான வரையறுக் கப்பட்ட போட்டிப் பரீட்சை நாளை 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டை களை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத் 15ஆம் பக்கம் பார்க்க

# தீவிரமடையும் பருவக்காற்று
## வடக்கிலும் வேகமெடுக்கும்

(கொழும்பு)

நாட்டைச் சூழவுள்ள பிராந்தியத்தில் தென் மேற்கு பருவக்காற்று தீவிரமடைந்துள்ளதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் பலத்த காற்று டன் கூடிய கனமழை பெய் 15ஆம் பக்கம் பார்க்க


# விமல் வீரவன்ஸவின் ஊடக செயலாளர் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் முன்னாள் ஊடகச் செயலாளர் பிரசாத் மஞ்சு நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவால் (FCID) கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பிரிவு தெரிவித் துள்ளது.

வீரவன்ஸ அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், அரச பொறியியல் கூட்டுத்தாபனத் திற்குச் சொந்தமான வாக 15ஆம் பக்கம் பார்க்க

# மின்சாரத்தை சேமிக்கும் கட்டமைப்பு வவுனியாவில் ஆரம்பம்




15ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டில் பதுங்கினாலும் குற்றமிழைத்த அரசியல்வாதிகள் தப்பமுடியாது
## அமைச்சர் ஹர்ஷண

(கொழும்பு)

இலங்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்பு டை ய 02ஆம் பக்கம் பார்க்க

## பொன்.சிவகுமாரனின்
# 52ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று உரும்பிராயில்



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# இயக்கச்சி பண்ணையில் தீ



(இயக்கச்சி)

இயக்கச்சியில் உள்ள சக்தி விவசாய பண்ணையில் நேற்று முன்தினம் (4) வியாழக்கிழமை பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி தீயணைப்புப் பிரிவினர் மற்றும் இராணுவத்தின் முதலாம் இயந்திரவியல் காலாட் படையினர், பொதுமக்களின் உதவியுடன் குறித்த தீயை மாலை சுமார் 6.30 மணியளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ந-7)


## முக்கிய அறிவித்தல்

எமது ரவீன்ஸ் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனையை மேற்கொள்ள ஒரு ஊழியர் (ஆண்/பெண்) உடனடியாகத் தேவை. சம்பளம் ரூபாய் 50,000 வழங்கப்படும்.

குறிப்பு : வாடகை அடிப்படையில் தொழில் செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(C-5788)

தொடர்பு : ப.ஈஸ்வரநாதன் - 076 4169845

RAVEENS EMC கரவெட்டி


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. சந்தைகள், மீன் கடை, இறைச்சிக்கடைகள் ஆகியவற்றிற்கான 2026.06.16 - 2026.12.31 வரையான காலப் பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி, ஏலக்கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கீழ்வரும் விபரங்களை கொண்ட சந்தைகள், மீன் கடை, இறைச்சிக் கடைகளை 2026.06.16 - 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு கேள்வி, ஏலக் கேள்வி விடுவதற்கு சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலானது 2025.09.09, 2025.11.11, 2025.12.17, 2026.01.26 ஆம் திகதிய தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி, ஏலக்கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

**ஏலக் கேள்வி 2026.06.15 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும்.**

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 2026.06.15 ஆம் திகதி காலை 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஏலக்கேள்வியின் சித்திகர கேள்விதாரர், ஏலத்தொகையின் 1/3 பங்கை உடனடியாக முற்பண வைப்பு பணமாக செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். முற்பண வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத்தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| இல | விபரம் | 2026 ஆம் ஆண்டு ஆகக்குறைந்த ஏலக்கேள்வி தொகை (ரூபா.) ( 2026.06.16 – 2026.12.31 வரை ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) (ரூபா.) | மாத வாடகை (ரூபா.) |
|---|---|---|---|---|
| 01 | கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 162,000.00 | ரூபா. 1620.00 | ரூபா. 1,000.00 |
| 02 | கோயிற்சந்தை கோழி இறைச்சிக் கடை | ரூபா 145,560.00 | ரூபா. 1455.00 | ரூபா. 1,000.00 |
| 03 | கொட்டடி சந்தை | ரூபா. 197,072.00 | ரூபா. 1970.00 | |
| 05 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 25,690.00 | ரூபா. 2569.00 | ரூபா. 1,000.00 |


**கோயிற்சந்தை மீன் கடைக்கான கேள்வியானது 2026.06.15 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.**

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2026.06.08 இல் இருந்து 2026.06.12 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2026.06.12 பிற்பகல் 2.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2026.06.15 பிற்பகல் 2.30 மணி வரை

| இல | விபரம் | 2026 ஆம் ஆண்டு ஆகக்குறைந்த கேள்வி தொகை (ரூபா.) ( 2026.06.16 – 2026.12.31 வரை ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) (ரூபா.) | மீளளிக்கப்படாத கேள்விப்பத் திரக் கட்டணம் | மாத வாடகை (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | கோயிற்சந்தை மீன் கடை | ரூபா 50,000.00 | ரூபா. 500.00 | ரூபா. 1,000.00 | ரூபா. 1,000.00 |

**குமாரசாமி சுரேந்திரன்,**
**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(C-5791) 2026.06.05



வலி வடக்கு, மயிலிட்டிப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “கொமோண்டோ” பங்களா முன்பாக ஏழாவது வெள்ளிக்கிழமையாக நேற்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# புத்தூரில் விபத்து மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

மட்டுவில் பகுதியிலிருந்து புத்தூர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 17 ஆம் நாள் அகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இது குறித்து கருத்து வெளியிட்ட சட்டத்தரணி ரஜித்தா தெரிவித்ததாவது,

13 என்புக்கூட்டு தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டுத் தொகுதிகளில் சிறுவர்களுடைய மூன்று என்புக்கூட்டு தொகுதி உட்பட 11 என்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரையில் நடைபெற்ற அகழ்வு பணிகளின் போது, 296 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 290 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது, என்புக்கூடொன்றுடன் தகர வடிவிலான பொருள் ஒன்று மீட்கப்பட்டு அது 106 எனும் இலக்கமிடப்பட்டு சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று சனிக்கிழமை அகழ்வுப் பணிகள் இடம்பெறாது எனவும், நாளை ஞாயிற்றுக்கிழமை அகழ்வுப் பணிகள் மீள இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-7,33)

## வெளிநாட்டில்...

முன்னாள் அரசியல்வாதிகள் சிலர் வெளிநாடுகளில் பதுங்கியிருந்தாலும் அவர்களைத் தப்பிக்கவிடப்போவதில்லை என அமைச்சர் ஹர்சண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு - திம்பிரிகஸ்யாய பிரதேச செயலக நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகளை இந்த நாட்டிற்கு அழைத்து வரும் திட்டம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் சிறப்பாக செயற்படுத்தப்படுகிறது.

நாங்கள் போதைப்பொருட்களையும், போதைப்பொருள் வலையமைப்பை நடத்துபவர்களையும் பெருமளவில் கைது செய்கிறோம்.

இன்று, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு அரசின் ஆதரவு இல்லை. அரசாங்கத்தால் சட்டங்களை இயற்றி, போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நிறுத்த முடியும்.

அதன் தேவையைத் தடுக்கத் தலையிடுவது சமூகத்தின் பொறுப்பாகும். அதற்காக சமூகம் இன்னும் அதிகமாகத் தலையிட வேண்டும்.

அதேபோன்று நீதிமன்றத்தால் குற்றம்சாட்டப்பட்ட வெளிநாடுகளில் உள்ள அரசியல்வாதிகளைத் திரும்ப அழைத்து வரும் செயற்பாடொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிடியாணை பெற்ற அத்தகைய நபர்களைத் திரும்ப அழைப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. குற்றவாளிகளுக்கு நாங்கள் தகுந்த தண்டனை வழங்கி வருகிறோம்.

குற்றவியல் வழக்குகளின் விசாரணை விரைவுபடுத்தப்பட்டுள்ளது. தலைமறைவாக இருப்பவர்கள் எப்போதும் தலைமறைவாகவே இருக்க முடியும் என்று நினைக்கக் கூடாது.

வெளிநாடுகளில் பதுங்கியிருந்தாலும் இலங்கையில் வழக்குகளுடன் தொடர்புடைய முன்னாள் அரசியல்வாதிகளையும் மிக விரைவில் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுப்போம். அவர்களைத் தப்பித்துக்கொள்ள விடமாட்டோம் என்றும் அமைச்சர் ஹர்சண நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு
- சமையல் உதவியாளர்
- Juice maker
- பணியாளர் (Waiter)
- பாத்திரம் சுத்தப்படுத்துபவர்(Dish Washer)

தேவை ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

(C-5790)

தொடர்பு : 077 360 1214


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தமிழர்கள் மீதான இனவாதம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை நாட்டின் அரசுகள் மாறினாலும், தமிழர்கள் மீதான இனவாதம் முடிவுக்கு வரவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.**



தமிழர் பகுதியில் தாயக எழுச்சிப் பாடலை எடிட் செய்து பாடிய குற்றத்திற்காக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டில் ஆட்சியாளர்கள் மாறினாலும், தமிழர்கள் மீதான இனவாதம் மாறவில்லை. இதனை இன்றும் உறுதிப்படுத்தும் வகையில், கிளிநொச்சியில் தாயக எழுச்சிப் பாடலை பாடிய இளைஞர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

என்னதான் இவர்கள் இனவாதம் இல்லையென கூறினாலும், தமிழர்கள் மீதான அடக்குமுறைகளைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

இலங்கையில் நிலவும் வீழ்ச்சி பொருளாதாரம் காரணமாக இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து தங்களின் வாழ்க்கையை தொடரும் நிலை உள்ளது. இது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும்.

எது எப்படி இருப்பினும், தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். அதுவரையில் நாமும் குரல் கொடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி)

# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

ஜூன் மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 4 ஆயிரத்து 765 ரூபாய்க்கு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படுமெனவும், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு விலை 1910 ரூபாவாக காணப்படுமெனவும் தெரிவித்துள்ளது.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 890 ரூபாய்க்கு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படுமென லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜூன் மாதத்திற்கான சமையல் எரிவாயு விலைத் திருத்தம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதாந்த எரிவாயு விலை திருத்தத்திற்கு அமைவாக, அதற்குரிய உத்தியோகபூர்வ அறிக்கைகள் தற்போது நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் லாஃப்ஸ் நிறுவனம் விலையை உயர்த்திய போதிலும், லிட்ரோ நிறுவனம் எந்த விலையிலும் திருத்தத்தையும் மேற்கொள்ளாமல் விலையை நிலையாகப் பேண நடவடிக்கை எடுத்தது.

மேலும் உலக சந்தையில் நிலவும் விலைகளுக்கு ஏற்ப இந்த ஆண்டு எரிவாயு விலைகளைத் திருத்தியமைக்கத் திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மீண்டும் சரிந்தது இலங்கை ரூபாய்

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியான வீழ்ச்சியினை நேற்றும் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 332.27 ரூபாயாக காணப்படுகின்றது.

அதேநேரம் அதன் விற்பனை விலை 342 ரூபாவாக அமைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி)

## தரமற்ற முதியோர் இல்லங்களுக்குத் தடை

## சட்டங்களை மீறினால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைத் தரங்களுக்கு அமையச் செயற்படாத முதியோர் இல்லங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே அறிவித்துள்ளார்.

ஹொரணை, அங்குருவாதொட்ட முதியோர் இல்லத் தீ விபத்தின் பின்னணியில், நாடளாவிய ரீதியில் உள்ள முதியோர் இல்லங்களின் பாதுகாப்பு மற்றும் தரம் குறித்து எழுந்துள்ள பாரிய சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே அமைச்சரின் இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முதியோர் இல்லங்களை நிர்வகிப்பதற்கான அத்தியாவசிய விதிமுறைகள் ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான சட்ட விதிகளின் வரைவுகளைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிமுறைகள், மாகாண சபைகளுடன் நடத்தப்படும் ஆலோசனைகள் மற்றும் உடன்பாடுகளின் பின்னர் மிக விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளன.

வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் இயங்கும் அனைத்து முதியோர் இல்லங்களும் இந்த புதிய ஒழுங்குமுறைச் சட்டக் கட்டமைப்புக்கு இணங்கவே கட்டாயமாகச் செயற்பட வேண்டும்.

நாட்டில் தற்போது இயங்கி வரும் சில முதியோர் இல்லங்கள் மிக உயர்ந்த தரத்தைப் பேணி வருகின்ற போதிலும், ஏனைய பல இல்லங்களில் போதிய உட்கட்டமைப்பு வசதிகள், அவசரப் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லை என்பதை அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான தரமற்ற நிறுவனங்கள் இயங்குவதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும், இந்த விடயத்தில் சட்டம் மிகவும் கடுமையான முறையில் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 455 பதிவு செய்யப்பட்ட முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன.

இந்த மொத்த எண்ணிக்கையில், வெறும் மூன்று முதியோர் இல்லங்கள் மட்டுமே அரசாங்கத்தினால் நேரடியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகப் போரைக் காரணம்காட்டி அரசாங்கம் தப்பிக்க முடியாது

## முஜிபுர் ரஹ்மான் சாடல்

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழல் குறித்து அரசுக்கு முறையான புரிந்துணர்வு உள்ளதா அல்லது இந்த நெருக்கடிகளை அவர்களால் சரியாக நிர்வகிக்க முடிகின்றதா என்ற பலத்த சந்தேகம் எழுந் துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை மட்டுமே நம்பி அரசு இயங்கி வருகின்றதே தவிர, நாட்டை மீட்டெடுப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் எதையும் அது முன்வைக்க வில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் ஒரே இடத்தில் தேங்கி நிற்கும் நிலையை எட்டியுள்ளது என்று குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர், புதிய முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்குள் வரவில்லை என்றும், புதிய திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

"தனியார் துறையின் முதலீடுகள் முடங்கியுள்ளதால் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் போயுள்ளன.

பொதுமக்கள் உணரும் வகையில் எந்தவொரு சாதகமான மாற்றமும் பொருளாதாரத்தில் தெரியவில்லை. மாறாக அரசின் வெற்றுப் பேச்சுக்கள் மட்டுமே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு உலகளாவிய போர்தான் காரணம் என அரசு கூறுவது குறித்துக் கேள்வி எழுப்பிய முஜிபுர் ரஹ்மான், போரினால் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் பாதிப்புகள் ஏற்படுவது உண்மைதான்.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளுக்கும் கூட போரின் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், உலகளாவிய சூழலைக் காரணம் காட்டி அரசு தனது நிர்வாகத் தோல்விகளில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

உலகில் இவ்வாறானதொரு



போர்ச் சூழல் உருவாகப் போகின்றது என்பது குறித்து அரசுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது என்று குறிப்பிட்ட அவர், இதனால்தான் கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிலேயே வரவிருக்கும் நெருக்கடிகளைச் சரியாக எதிர்கொள்வதற்குத் தேவையான தீர்க்கமான முடிவுகளை எடுக்குமாறு தாங்கள் அரசை வலியுறுத்தியதாகவும் நினைவூட்டினார்.

எனினும், அரசு அதற்குத் தயாராக இருக்கவில்லை என்றும், அவ்வாறு திட்டமிடத் தவறியதன் மோசமான விளைவையே இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அனுபவித்து வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## வடமாகாண தைக்வொன்டோ போட்டி

# 13 பதக்கங்களைக் கைப்பற்றி மு/தண்டுவான் மகாவித்தியாலயம் சாதனை



2026 ஆம் ஆண்டுக்கான கல்வி அமைச்சின் வடமாகாண பாட சாலைகளுக்கு இடையிலான தைக் வொண்டோ போட்டி கடந்த 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கிளி நொச்சி உள்ளக விளையாட்டு அர ங்கில் நடைபெற்றது.

வட மாகாணத்தின் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாண வர்கள் பங்கேற்ற இப்போட்டியில், முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற் குட்பட்ட தண்டுவான் மகாவித்தி யாலய மாணவிகள் அணி சிறப் பான திறமைகளை வெளிப்படுத்தி சாதனை படைத்துள்ளது.

பெண்கள் பிரிவில் போட்டியிட்ட தண்டுவான் மகாவித்தியா லய மாணவிகள் 5 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 6 வெண் கலப் பதக்கங்கள் என மொத்தம் 13 பதக்கங்களை வென்றுள்ள னர்.

இந்த வெற்றியின் மூலம் வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்கள் தைக் வொண்டோ போட்டியில் முதலி டத்தைப் பெற்று, முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் துணுக்காய் கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (8-299)

## அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஒரு நாள் தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற் றியது.

பாகிஸ்தான் மற்றும் அவுஸ் திரேலியா அணிகளுக்கு இடை யிலான 3ஆவது ஒருநாள் போட்டி கடாபி மைதானத்தில் நடந்தது.

முதலில் ஆடிய அவுஸ்திரே லியா 42 ஓவர்களில் 157 ஓட் டங்களுக்கு ஆல்அவுட் ஆனது.

அணித்தலைவர் ஜோஷ் இங் லிஸ் 65 ஓட்டங்கள் விளாசினார். ஷாஹீன் ஷா அப்ரிடி 3 விக்கெட்டு கள் வீழ்த்தினார்.

பின்னர் களமிறங்கிய பாகிஸ் தான் அணி பர்ஹான் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து 27 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மாஸ் சதாகத் ஆட்ட மிழந்தார்.

பாபர் அஸாம் நிதானமாக ஆட, மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்தன. சுழற்பந்து வீச் சாளர்கள் பாகிஸ்தான் அணிக்கு கடுமை யான நெருக்கடி கொடுத்தனர்.

கோரி (8), சல்மான் (15) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேற, பாபர் அஸாம் (84) ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

எனினும் ஷதாப் கான், அப்துல் சமாத் கூட்டணி நங்கூரமாக நின்று ஆடி அணியை வெற்றி பெற வைத்தது. பாகிஸ்தான் அணி 41.5 ஓவர் களில் 161 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஷதாப் கான் 42 பந்துகளில் 29 ஓட்டங்களும், அப்துல் சமாத் 18 ஓட்டங்களும் எடுத்தனர். கூன மன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி னார். (3)





## அதிர்ந்தது ரோம் அரங்கம்

# ஈட்டி எறிதலில் இலங்கை வீரர் புதிய மைல்கல்




இலங்கையின் 23 வயது டைய இளம் தடகள வீரரான ருமேஷ் பத்திரகே , ரோம் டைம ண்ட் லீக் தொடரில் 92.62 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து உல கையே வியப்பில் ஆழ்த்தியுள் ளார்.

இந்த அசாத்திய சாதனை மூலம் ஆசிய வரலாற்றின் மிகச் சிறந்த இரண்டாவது ஈட்டி எறிதல் வீரர் என்ற பெருமையை யும், உலக வரலாற்றின் மிகச் சிறந்த தடகள வீரர்களின் வரிசை யில் எட்டாவது இடத்தையும் பிடி த்து வரலாற்றுப் பக்கங்களில் தனது பெயரைப் பொறித்துள் ளார்.

ஆண்கள் பிரிவிற்கான ஈட்டி எறிதல் போட்டியின் தனது இர ண்டாவது முயற்சியிலேயே இந்த பிரம்மாண்ட தூரத்தை எட்டிய பத்திரகே, புதிய இலங்கை தேசிய சாதனையைப் படைத்துள் ளார்.

அத்துடன், இது 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய ரீதியில் மிக நீண்ட தூரமாக பதிவாகியுள்ளதுடன், அவரது தனிப்பட்ட வாழ்வின் மிகச்சிறந்த சாதனையாகவும் அமைந்துள் ளது.

இதன் மூலம், கடந்த 20 வரு டங்களாக ஆண்ட்ரியாஸ் தோர் கில்ட்சன் வசம் இருந்த 90.34 மீற்றர் ரோம் டைமண்ட் லீக் போட்டி சாதனையை முறியடித்து, இளம் வயதிலேயே உலகத் தடகள அரங்கில் இலங்கையின் கொடியை ருமேஷ் பத்திரகே உயரப் பறக்கவிட்டுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழில் தரமற்ற பனாட்டினை உற்பத்தி செய்தவருக்கு 6 மாத கால சிறை

(யாழ்ப்பாணம்)

தரமற்ற பாணிப்பனாட்டினை உற்பத்தி செய்தவருக்கு 6 மாத கால சிறைத்தண்டனை விதித்த நீதிமன்றம் அதனை விநியோகித்தவருக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட வியாபார நிலையம் ஒன்றில் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரான ப.தினேஸினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, பாணிப்பனாட்டு மாதிரிகள் பெறப்பட்டு அதனுடைய தரம் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதற்கு அரச இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் அனுப்பி வைக்கப்பட்ட பாணிப்பனாட்டு தரமற்றதும் எனவும் மண் மற்றும் வெளிப்பொருட்களால் பாதிக்கப்பட்டதும் மனித நுகர்விற்கு ஏற்றதல்லதும் என பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து உணவுப் பொருளினை உற்பத்தி செய்த உரிமையாளருக்கும் அதனை விநியோகம் செய்த விநியோகஸ்தருக்கு எதிராகவும் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, குறித்த உணவுப் பொருளினை உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கு 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் விநியோகஸ்தருக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் அறவிடப்பட்டது. (3)



பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் பிரதி சபாநாயகருமான அமரர் சிவசிதம்பரத்தின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலை முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையமும் ஸ்ரீ துர்க்கா முன்பள்ளியும் இணைந்து நடத்தும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு ஸ்ரீ துர்க்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையத் தலைவர் இரத்தினசிங்கம் கெங்காதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ச.தர்மசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (3)

## சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சி.சிரீ றங்கனின் "ஐயாள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**

**விண்ணப்பதாரரின் பெயர்: அன்ரன் சேவியர் கைம்பெண் யூடின் ரஜனி**

**ஆதனப்பதிவேட்டின் படி பெயர்: சொந்தக்காரர்**

**ஆதன இல-918 வீதி -சேந்தாங்குளம் வீதி வட்டாரம் - 03**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03 "சேந்தாங்குளம்" வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. இவ் ஆதனம் சியோன்பிள்ளை மனுவல்பிள்ளைக்கு சொந்தமாக இருந்தது. அவர் காலஞ்சென்று விட அவரது மகனாகிய வின்சன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் முகதாவில் 5748/02.07.2016 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் மனுவல்பிள்ளை வின்சன் யூனியற் நிர்மலா தங்களுக்கு சொந்தமென வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் முகதாவில் 5749/02.07.2016 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் அவர்களது மகனாகிய வின்சன் யொனத்தால் ஆசந் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் இவ் ஆதனம் பிரசித்த நொத்தரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் 1812/05.02.2026 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் அன்ரன் சேவியர் கைம்பெண் யூடின் ரஜனி என்பவருக்கு சொந்தமாகியது.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் C.விஷ்வநாதன் அவர்களால் அளந்து வரைந்த 2160 ஆம் இலக்க 2025.05.03 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு இரண்டு (2) குளி பன்னிரண்டு தசம் ஒன்று பூச்சியம் (12.10) ஆக காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலி தென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்றுபெரியவிளான் இறை "மணியாண்டிக்காடு" நிலப்பரப்பு 3 1/2 ஆகும்.

இதன் எல்லைகள்

கிழக்கு:- ஜோச் கைம்பெண் பிலோமினாவின் ஆதனம்

வடக்கு:- மனுவல்பிள்ளை அமலராஜாவின் ஆதனம்

மேற்கு :-வீதி

தெற்கு :-ஒழுங்கை

இவ்வாதனத்தை அன்ரன் சேவியர் கைம்பெண் யூடின் ரஜனி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அன்ரன் சேவியர் கைம்பெண் யூடின் ரஜனி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.ஜெயதீசன்,**
**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை- மானிப்பாய்.** (7787)



இராணுவத்தின் 54 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் குடும்ப நல பணியகத்தில் இடம்பெற்றது.

## சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதி இலக்கம் 27 இல் 13.05.2026 ஆம் திகதியில் அனுமதிக்கப்பட்டு 02.06.2026 ஆம் திகதியில் இறந்து போன கண்ணன் குணரத்தினம், விலாசம்-அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்-196417001793 என்பவரது சடலமானது யாரும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

எனவே குறித்த சடலத்தினை அடையாளம் காட்ட உதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (3)

## 31ஆம் நாள் நினைவலைகள்

கச்சாய் பெருமகனே உதிர்ந்ததா
உன்வாழ்வு
ஆங்கில மருத்துவர்
அமரர்
**செல்லத்துரை கனகசிங்கம்**



"நத்தையின் முத்தாக
கச்சாயில் உதித்தெழுந்தாய்
மலையகத்தில் உன்வாழ்வு
மலர்ந்தெழுந்த ரோசா தான்
எம் மருத நிலத்தில் நீ என்றும்
வாடாத மல்லிகை தான்
உன் வாழ்வு என்றெமக்கும்
இருட்டினில் ஓர் தீப்பந்தம்"

என்றும் நினைவுடன் - நண்பர் குழாம்,
வினோபா நூலகம், வினோபா நகர், கச்சாய். (C-5787)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுகாதார ஊழியர் நியமனத்தில் முறைகேடு;

# யாழ்.போதனா முன்பாக பாரிய போராட்டம்




**(யாழ்ப்பாணம்)**

**யாழ் போதனா வைத்தியசாலையில் சுகாதார தொண்டர்களாக பல வருடங்களாக சேவையாற்றி வரும் நிலையில் நியமனம் வழங்கலுக்கான நேர்முகத் தேர்வில் தம்மை உள்வாங்காது புதியவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாக கோரி பாதிக்கப்பட்ட சுகாதார தொண்டர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

நேற்று முற்பகல் 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்று, மதியம் வரை நீடித்தும் எவராலும் வாக்குறுதி வழங்கப்படாத நிலையில் நிறைவுக்கு வந்தது.

குறித்த போராட்டத்தின் போது பல்வேறு கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டித் தமக்கான நியாயத்தை கோரிய போராட்டகாரர்கள் தீர்வு கிடைக்காவிடின் இன்று நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வை நடைபெறவிடாது தடுத்து போராட்டம் முன்னெடுக்கப் போவதாகவும் கூறினர்.

இதேநேரம் தாம் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக குறித்த சேவையை நிலையான ஊதியம் கூட கிடைக்காது மேற்கொண்டு வருவதாகவும் தற்போதைய அரசாங்கத்தை தாம் கொழும்பில் சென்று சந்தித்து கலந்துரையாடியபோது சேவையில் இருக்கும் 120 பேருக்கும் சேவையின் அடிப்படையில் நியமனம் வழங்கும் போது உள்வாங்குவதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

ஆனால் இன்று அவர்களது வாக்குறுதி போலியாகிவிட்டது. இன்று நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு 92 பேர் அழைக்கப்பட்டுள்ள நிலையில் சேவையில் இருந்த 15 பேரே அதில் உள்வாங்கப்பட்டுள்ளனர். மிகுதி 77 பேரும் வைத்தியசாலையில் எந்தவொரு சேவையையும் முன்னெடுக்காத அனுபவமற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே எமக்கான நியமனம் கிடைக்கவேண்டும் அல்லது நாம் தொடர்ந்தும் போராடுவோம் என தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ரஜீவன் மற்றும் இளங்குமரன் ஆகியோர் வருகைதந்து பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றனர். (3-33)




தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் தியாகி பொன் சிவகுமாரனின் 52ஆவது நினைவுதினம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் இடம்பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

## கிளிநொச்சியில் திடீர் வாகன சோதனை போக்குவரத்துப் பொலிஸார் அதிரடி

(தருமபுரம்)

கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸ் பிரிவின் அதிகாரிகளின் உதவியுடன் கிளிநொச்சி ஏ-35 பிரதான வீதியில் செல்லும் வாகனங்களுக்கான சோதனை நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர் மற்றும் தருமபுரம் போக்குவரத்து பொலிஸார் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது தற்போது பாவனையில் உள்ள வாகனங்கள் மக்கள் பயன்பாட்டுக்கு உகந்தவையா? என்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டுள்ள அலங்கார உபகரணங்களை அகற்றுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

வீதியால் செல்வதற்கு தரமற்ற சில வாகனங் களுக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரால் தண்டப் பணமும் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-316)

## ஏழாவது வெள்ளியாக தொடரும் மயிலிட்டி போராட்டம்

### ரவிகரன் எம்.பி பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வலி வடக்கு, மயிலிட்டிப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணி உரிமையாளர்கள் காங்கேசன்துறை - தொண்டைமானாறு வீதியின் அருகே இராணுவத்தினரின் "கொமோண்டோ" பங்களா முன்பாக நேற்று ஏழாவது வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு மக்களால் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இடம்பெற்ற கவனயீர்ப்பு நடவடிக்கையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (3)

## சோமஸ்கந்த கல்லூரியில் இடம்பெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூரின் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்- 2026 நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 7.40 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபரும் தேர்தல் ஆணையாளருமான சி. திரிகரனின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் பொறுப்புணர்வுடனும் கலந்து கொண்டு தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தின் சிறந்த ஒத்துழைப்புடன் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தல் - 2026, கல்லூரியின் வரலாற்றில் நினைவு கூரத்தக்க ஜனநாயக நிகழ்வாக அமைந்தது. (3)



## நெல்லியடியில் சுகாதார சீர்கேடு;

### பலசரக்குக் கடைக்கு 20 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி சுகாதார பரிசோதகர் பிரிவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பலசரக்கு கடைக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடி சுகாதார பரிசோதகரால் கடந்த மாதம் 24ஆம் திகதி நெல்லியடி பகுதியில் இயங்கும் பல சரக்கு கடைகள் பரிசோதிக்கப்பட்டன.

இதில் ஒரு பலசரக்கு கடையில் பலசரக்கு பொருட்களுடன் எலி எச்சங்களும் பலசரக்கு பொருட்கள் வைக்கப்பட்ட நிலம் அழுக்காகவும் காணப்பட்டதையடுத்து கடந்த 24ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கானது புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இரு குற்றங்களுக்கும் எதிராக 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"

# 31 ஆம் நாள் நினைவில்...

"இதயக் கருவறையில் எம் அன்னை"



வையகத்தில்
27 – 05 – 1945

வானகத்தில்
07 – 05 – 2026

## அமரர். சுப்பன் பூமணி (இதய தீபம்)

ஆகாயப் பந்தலிலே பொன் ஊஞ்சல் ஆடுவதற்கு
அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்பன் நாமம் சூட்டிய
மானுட ஜீவனை மணவாளனாகக் கரம் பிடித்து
கட்டினில் ஆட்டிய தாயே..!
இவ் கலியுகத்தில் இன்று...
ஏழேழு ஜென்மத்து உறவாக...
பூர்வீக புண்ணிய பந்தமாக...
மறு பிறவி எடுத்து வந்த எம் தந்தையை
எம் கலர்கள் பணித்திட "தொட்டினில் ஆட்டுவதற்கு
பெரும் பாக்கியம் பெற்ற பாக்கியவதி மகளே...
இப் பூமி தனில் இப் பெறுபேற்றை பெறுவதற்கு
வேறு புண்ணியம் உண்டோ தாயே...!
அமைதியாக உறங்கிடு... எங்கள் நிலமகள் அன்னையே
எங்கள் பூமாதேவி தாயே....!

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த
எம் அன்னையை நாம் பிரிந்து விட்ட போதிலும்
நாம் இழந்து விட்ட போதிலும்
நான்கு தலைமுறையாக
எம்மைத் தத்தெடுத்து அரவணைத்த
இயற்கை அன்னையவள் எங்கள்
விவசாய அன்னையை எம்மால்...
பிரிந்திட முடியாதம்மா...!
இழந்து விடவும் முடியாதம்மா...!
எங்கள் பூமாதேவி தாயே...!
வரம் அருள்வாய் நீயே...!

இதயத்துடிப்பு உள்ள வரை
உயிர் மூச்சு இருக்குமம்மா!
உமது மண் வாசனையும்
பல பயிர்களின் நறுமணம் வீசிய
தென்றல் காற்றும்
காளைகளின் தடம் பதித்த டக்டக் ஒலியோசையுடன்
கணீர், கணீர் எனும் மணியோசையும்
சல சல வென ஓடிடும் தண்ணீர் அலைகளும்...
சூத்திர சங்கிலியின் சர்விர் சர்விர் நயன ஓசையும்
அடுத்த பிறவியில் நாம் காண்போம் அம்மா!

இதயக் கருவறையில் பல வேதனைகள்...
சோதனைகள், அவமானங்களை சுமந்த எம் அன்னை...
இன்று உமது மௌனக் கதவின்...
உடைந்த வார்த்தைகளின்
இரகசியம் என்ன?
அதன் சங்கதி என்ன?
எங்கள் பரமசிவன் இவ் உலக பிரபஞ்சத்தின் நாயகன்...
ஏழேழு ஜென்மங்களை காத்தருளும் லோகேஸ்வரன்...
இன்று ஈசன் எனும் நாமம் சூட்டப்பட்ட
மானுட ஜீவன் வடிவத்தில்.. இப் பூமி தனில்
எங்கள் முன் வந்துதித்தாரம்மா...
மனம் கலங்காத எம் நில மகளே...!

மலைமகள் அவதாரம் எடுத்து இறை தூதுவன் வடிவில்
வந்துதித்த எங்கள் ஈசனை துர்க்காதேவியாக மெய்யுருகி
இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்
எங்கள் பூமாதேவி அன்னையே!

பகவான் சுட்டி விரலின் சங்கு சக்கர அசைவினிலே...
இவ் மானுட உலகம் நிலைக்கு தம்மா...!
எங்கள் இயற்கை அன்னையின்
உரிமை புத்திரன் இளைய மைந்தன்
பார்த்தீபநாமம் பெரு விரல் அசைவிலே
எங்கள் விவசாய அன்னை
ஒரு கணம் சிலிர்க்குமம்மா...!
மறு கணம் எம்மை தத்தெடுத்து
அரவணைத்து முத்தமிட்ட அன்னையவள்
புதிய அவதாரம் பிறப் பெடுக்கும்
ஊரந்தனை யெனும் நிலமகள் குழந்தையை.. கதிரவன்
ஒளி படர்ந்து முத்தமிட்டு அரவணைக்க
பூமாதேவி தாயே...!
வரம் அருள வேண்டுமம்மா...!

பார்த்தீபனாம் இப் பாரினிலே
பார்தீபமாக ஒளி வீசி
பெரும் பாக்கியம் பெற்ற பாக்கியவானாக..
எம் சந்ததி நெஞ்சங்களில்

இதய தெய்வமாக வீற்றிருக்கும் காலம்
பகவானின் சங்கு சக்கரமாக
உருண்டோடி வரும் காலம்
வெகு சீக்கிரம் வரும் அம்மா...!
அமைதியாக வாசம் புரிந்திடு
நில மகள் அன்னையே...!

தென் திசையினிலே வாசம் புரிந்து
குணசீலனை கண்டெடுத்த
பொட்டு வைத்த வட்ட நிலா- என்றும்
கண்ணை இமை காப்பது போல்
எங்கள் இயற்கை அன்னை யவள்
விவசாய அன்னைக்கு
இறை சாட்சியாக, மனச்சாட்சியாக
இணைப்புப் பாலமாக முழு நிலவாக...
மிளிர்ந்து வட்ட மடிக்க...

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட
சாமானிய வாழ்வினிலே
முத்தமிழ் வளர்த்திட்ட...
"சுடர் ஒளி" யாக மிளிர்ந்திட்ட
பெருந்தகை ஆசான் புளகாங்கிதம் பெற்ற
கல்விமான் பிரபு தத்துவ சாட்சியும்..
ஒன்றிணையாக "சிறையில் மலரும்
தெய்வீகமலராம்.." நிலமகள் மீது- எம்
சந்ததியினர் கால் தடம் பதித்து முத்தமிட
கதிரவன் கண்ட குழந்தை மண்ணில்
தவழ்ந்து சிலிர்த்திடும் காலம் வருமம்மா!

நான்கு தலைமுறையாக தத்தெடுத்து
அரவணைத்த இயற்கை அன்னை
வரும் சந்தத்தியினருக்காக
எம்மை பெற்றெடுத்த அன்னையாக திகழும் காலம்
பரம்பொருள் ஈசன் நாமத்தில் வருமம்மா...!
பொறுமை காத்து வாசம் புரிந்திடு
எம்மை பெற்ற பூமாதேவி அன்னையே...!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி...

(7788)

"சூத்திர வளவு",
பளை, வீமன்காமம் தெற்கு,தெல்லிப்பளை.


நீதி தேவதைக்கு
நீதி மடலாக சமர்ப்பணம்

என்றும் இதய தீபமாய் ஒளிரும் நினைவுகளில் சுப்பன் சதீஸ்குமார் (மகன்)
மற்றும் மகள்கள், மருமகன்கள் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## பா.ஜ.க.விலிருந்து விலகினார் கே.அண்ணாமலை



(சென்னை)

பல நாட்களாக நிலவி வந்த தீவிர யூகங்களுக்கு மத்தியில், பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக முன்னாள் தலைவர் கே.அண்ணாமலை கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி யிலிருந்து அண்ணாமலை இராஜினாமா செய்ததை பாஜகவின் தேசியத் தலைவர் நிதின் நபின் ஏற்றுக்கொண்டதாக பாஜக ஒரு செய்திக்குறிப்பில் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

அண்ணாமலையைத் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வைக்க பாஜகவுக்குள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு மத்தியிலும் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## லெபனான்- இஸ்ரேல்
## நிராகரித்த ஹிஸ்புல்

(லெபனான்) ------------------

**இஸ்ரேல்-லெபனான் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை, லெபனானின் ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.**


இது தொடர்பில் ஈரான் ஆதரவு குழுவின் தலைவர் நயீம் காசிம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேச்சு வார்த்தைகள் லெபனானுக்கு பயனற்றதாகவும், அவமானகரமானதாகவும் இருந்ததாகவும், மேலும் லெபனான் மக்களின் பரந்த பிரிவினரால் திட்டவட்டமாக அவை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பானது டெஹ்ரானுடன் அமைதியை ஏற்படுத்துவதற்காக அங்கு மோதலை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது.

வொஷிங்டனுடன் எந்தவொரு அமைதி ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் லெப

## பாதுகாப்பற்ற உணவால் ஆண்டுக்கு 15 லட்சம் பேர் பலி

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



(ஜெனீவா)

உலகளவில் பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 86.6 கோடி பேர் நோய் வாய்ப்படுவதுடன், 15 லட்சம் பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள புதிய அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வெறும் 9 சதவீதம் மட்டுமே உள்ள போதிலும், உணவினால் ஏற்படும் ஒட்டுமொத்த நோய் பாதிப்புகளில் மூன்றில் ஒரு பகுதியை (33%) இந்த குழந்தைகளே எதிர்கொள்கின்றனர்.

இந்த குழந்தைகளுக்கு ஏற்படும் கடுமையான வயிற்றுப்போக்கு மரணத்தை விளைவிப்பதுடன், உணவில் கலந்திருக்கும் ஆசனிக், ஈயம் போன்ற இரசாயன நச்சுகள் அவர்களின் மூளை வளர்ச்சியைப் பாதித்து ஆயுட்கால நரம்பியல் குறைபாடு களையும் ஏற்படுத்துகின்றன.

பிராந்திய ரீதியாக ஆபிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே இந்த பாதிப்புகள் மிக உயர்வாகப் பதிவாகியுள்ளன.

உணவு நச்சுத்தன்மையால் ஏற்படும் மரணங்களில் 73 சதவீதத்துக்கு பாக்டீரியா, வைரஸ்கள் போன்ற உயிரியல் காரணிகளை விட இரசாயன நச்சுகளே முக்கிய காரணமாக அமைகின்றன.

குறிப்பாக, உணவில் கலக்கும் கனிம ஆசனிக் 42 சதவீத மரணங்களுக்கும், ஈயம் (Lead) 31 சதவீத மரணங்களுக்கும் காரணமாக அமைவதுடன், இவை மாரடைப்பு மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களையும் தூண்டுகின்றன.

ஆரோக்கியப் பாதிப்புகளுக்கு அப்பால், இந்த நோய்த்தாக்கங்களால் மக்கள் வேலைக்குச் செல்ல முடியாமல் போவதால் உலகளாவிய உற்பத்தித்திறனில் ஆண்டுக்கு சுமார் 310 பில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதார இழப்பு ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், சுத்தமான குடிநீர், முறையான சுகாதாரம் மற்றும் உணவை பாதுகாப்பாகக் கையாளுதல் போன்ற எளிய நடைமுறைகள் மூலம் இந்த பெரும் மனித உயிரிழப்புகளையும் நோய்களையும் தடுக்க முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## போர் நிறுத்தத்திற
## மீண்டும் அழைப்பு



(கீவ்)

முழுமையான போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடித்தில் அவர், முழுமையான போர் நிறுத்தம் ஒன்றிற்கும் தாம் தயாராக இருப்பதாகவும், இது தொடர்பா புடினுடன் நேருக்கு நேர் சந் திப்பையும் முன்மொழிந்தார்.

உக்ரைன் ஜனாதிபதி அலு வலகத்தின் இணையத் தளத் தில் வெளியிடப்பட்ட அந்தக் கடி தத்தில் ஜெலென்ஸ்கி, நமக்கும் உங்களுக்கும் இடையிலான நேரடி ஈடுபாட்டின் மூலம் இந்த போரை முடிவுக்குக் கொண்டு வர உக்ரைன் முன்மொழி கிறது.

நான் உங்களுடன் ஒரு சந் திப்பை முன்மொழிகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பேச்சு வார்த் தைகள் முடியும் வரை முழு மையான போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் தயாராக உள்ளது என்றும் அவர் மேலும் கூறி னார்.

போர்க் கைதிகளை அனை வரும் பரிமாறிக் கொள்ளும் ஒரு முறையையும் ஜெலென்ஸ்கி முன் மொழிந்தார், இது போரை முடிவுக்குக் கொண்டு வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

# ல் போர் நிறுத்தத்தை

# ல்லா!




தி
ற்
ப்
து.
த
ம்
ப

னானில் போர் நிறுத்தம் செய்வதை ஈரான் ஒரு நிபந்தனையாக வைத்துள்ளது.

மேலும், இஸ்ரேல் அங்கு தாக்குதல்களைத் தொடர்ந்தால், நேரடியாகத் தலையிடக்கூடும் என்றும் அண்மைக்காலங்களில் ஈரான் சூசகமாக எச்சரித்துள்ளது. இருப்பினும், மோதலை நிறுத்துவதற்காக இஸ்ரேலுக்கும் லெபனான் அரசாங்கத்திற்கும் இடையே அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா தலைவர் நயீம்காசிம் நிராகரித்தார்.

இது குறித்து இஸ்ரேல், லெபனான் அல்லது அமெரிக்காவிடமிருந்து உடனடியாக எந்தப் பதிலும் வரவில்லை. (நி)

## ஓமானின் எண்ணெய் முனையம் அருகே தாக்குதல்



(ஓமன்)

ஓமன் நாட்டின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி முனையங்களில் ஒன்றான மினா அல் பஹால் முனையம் அருகே குண்டுவெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக முனையத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கப்பல் போக்குவரத்துத் தரவுகளின்படி, குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து பல கச்சா எண்ணெய் கப்பல்கள் துறைமுகத்திற்கு வெளியே கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருப்பது தெரியவந்து ள்ளது.

இந்த குண்டு வெடிப்பு ஒரு ட்ரோன் தாக்குதலாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஈரானிய ட்ரோன் தான் இந்த தாக்குதலை மேற்கொண்டதா என்று விசாரணை நடந்து வருகிறது.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

மினா அல் பஹால் முனையம் ஓமன் வளைகுடாவில் அமைந்துள்ள மிக முக்கிய எண்ணெய் ஏற்றுமதி முனையம் ஆகும்.

கடந்த புதன்கிழமை ஓமன் வளைகுடாவில் ஈரானிய எல்லைக்கு அருகே வந்த அமெரிக்க இராணுவக் கப்பல் ஒன்றை தாங்கள் தாக்கியதாக ஈரான் தெரிவித்தது. ஆனால், அமெரிக்கா அதை மறுத்தது. (நி)

# திற்கு உக்ரைன் தயார்

# விடுத்தார் ஜெலன்ஸ்கி

யாராக
ாடர்பாக
நேர் சந்
ந்தார்.
தி அனு
த் தளத்
ந்தக் கடி
மக்கும்
யிலான
ம் இந்தப்
காண்டு
மொழி

ஒரு சந்
கிறேன்
.

வார்த்
ர முழு
நத்திற்கு
ட்ள்ளது
ம் கூறி

அனை
நம் ஒரு
ன்ஸ்கி
போரை
டு வரு


வதற்கான ஒரு நல்ல முன்னுரையாக இருக்கலாம் என்றும் கூறினார்.

நேருக்கு நேர் பேச்சு வார்த்தைகள் மட்டுமே நிலப்பரப்பு குறித்த ஒரு உடன்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று கூறி, புடினுடனான சந்திப்பிற்கு ஜெலென்ஸ்கி மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

அந்தக் கடிதம் வெளியிடப்பட்டபோது, செனட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பை முடித்துக் கொண்டிருந்த புடினிடமிருந்து உடனடியாக எந்தக் கருத்தும் வரவில்லை.

2022 ஆம் ஆண்டு ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பின்னர், ஜெலென்ஸ்கி புடினிடம் நேரடியாக முறையிட்ட மிகச் சில சந்தர்ப்பங்களில் இந்தக் கடிதமும் ஒன்றாகும்.

ஈரான் போர் காரணமாக அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தைகள் முடங்கி



யுள்ளதால், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பல மாதங்களாகத் தேக்கமடைந்துள்ளன.

இஸ்தான்புல், அபுதாபி மற்றும் ஜெனீவாவில் இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற முந்தைய சுற்றுப் பேச்சுவார்த்தைகள், போருக்குப் பிந்தைய தீர்வில் நிலப்பரப்பு குறித்த முக்கியப் பிரச்சினையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தத் தவறிவிட்டன. (நி)

# 7வருடங்களின் பின்

## வடகொரியா செல்லும் சீன ஜனாதிபதி



(பியாங்யாங்)

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் அடுத்த வாரம் வடகொரியாவிற்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இரு நாடுகளும் நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளன. ஷி ஜின்பிங் கடந்த ஏழு ஆண்டுகளில் வடகொரியாவிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

அண்மைக்காலமாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், ரஷ்யாவுடன் மிக நெருக்கமான இராணுவ உறவுகளைப் பேணி வருவதுடன், உக்ரைன் போருக்கு ஆதரவாகத் தனது படைகளையும் ஆயுதங்களையும் அனுப்பி உதவி வருகிறார். இந்தச் சூழலில், வடகொரியா மீதான தனது மூலோபாய ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் சீனா இந்த அதிரடி நகர்வை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியா ரஷ்யாவுடன் நெருங்குவதால், பியொங்யாங் மீதான தனது செல்வாக்கை மீண்டும் உறுதிப்படுத்தவும், வடகிழக்கு ஆசியாவில் தனது மூலோபாய நலன்களைப் பாதுகாக்கவும் சீனா இந்த விஜயத்தைப் பயன்படுத்துகிறது.

எதிர்வரும் திங்கள் முதல் செவ்வாய்க்கிழமை வரை ஷி ஜின்பிங் வடகொரியாவிற்கு அரச விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதற்கு முன்னர் அவர் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதமே அங்கு சென்றிருந்தார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோரை பீஜிங்கில் அடுத்தடுத்து சந்தித்து வரவேற்ற சில வாரங்களிலேயே ஷி ஜின் பிங்கின் இந்த வடகொரிய விஜயம் அமைகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாண இராச்சிய இறுதி மன்னன் சங்கிலியனின் 407 வருட நினைவு தினம் இன்று



மாவீரன் இரண்டாம் சங்கிலியன், யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னன். கிபி 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி புரிந்தவன். சைவத்தமிழ் மன்னன். போர்த்துக்கேயப் பறங்கிப் படைகளிடமிருந்து சைவத்தையும் தமிழையும் இறுதி மூச்சு வரை காப்பாற்றியவன். போர்த்துக்கேயரின் கட்டாய மதமாற்ற நடவடிக்கைகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவன்.

1619 ஆம் ஆண்டு சங்கிலிய மன்னன் கைது செய்யப்பட்டு கோவா சிறையில் அடைக்கப்பட்டான். அங்கு கி.பி 1619 தொடக்கம் 1621 வரை மரண தண்டனை நிறைவேற்றும் வரை போர்த்துக்கீச தளபதிகள் பல மதமாற்ற முயற்சிகளை மேற்கொண்டு இருந்தனர். சங்கிலியால் கால், கைகளைப் பிணைத்தும் பல துன்புறுத்தல்களைச் செய்தும் அதிகார அச்சுறுத்தல்களை மேற்கொண்டும் மதம் மாறும் படி கட்டாயப்படுத்தினார்கள். பணிய வைக்க முயற்சி செய்தனர்.

அஞ்சா நெஞ்சுரமும் சைவத்தமிழ் பற்றும் வைராக்கியமும் கொண்ட மாவீரன் சங்கிலியன் முன்னால், பறங்கிப் படைகள் தோற்று வெட்கித் தலை குனிந்து நின்றனர். ஏறக்குறைய இரு வருடங்களாக போர்த்துக்கேயப் படைகள் சங்கிலியன் மனத்தை மாற்றி, மதம் மாற்றம் செய்ய எடுத்த முயற்சிகள் எல்லாம் வெறும் விழலுக்கு இறைத்த நீராகிப் போயின. கடுங்கோபம் கொண்ட போர்த்துக்கேயத் தளபதி 1621 ஆம் ஆண்டு சங்கிலியனை இந்தியாவின் கோவாவில் தூக்கிலிட்டு துடிதுடிக்க மரண தண்டனை வழங்கினான். அன்றைய தினமே! வைகாசி தேய்பிறை எட்டாம் நாள். இந்தப் படுகொலை நடந்து இன்றுடன் 407 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன.

இந்தக் கொடூரமான கொடுமை நிறைந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் 2ஆம் சங்கிலி மன்னனின் நினைவு தின நாளை மேற்குறித்த நாளில், சங்கிலி மன்னன் நினைவு தின குழு கடந்த பல வருடங்களாக அனுஷ்டித்து வருகிறது.

மாவீரன் சங்கிலியன் நினைவு நாளில் ஒவ்வொரு சைவத்தமிழ் குடிமகனும் விழித்தெழ வேண்டும். வீரம் நிறைந்த போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அகிம்சை, சத்தியம், தர்மம் ஆகிய வழிகளில் குரல் கொடுக்க முன்வர வேண்டும். இலங்கை திருநாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்பட்டு சைவத்தின் காவலராக நாவலர் போல், இரண்டாம் சங்கிலி மன்னன் போல் உருவாக வேண்டுமென, சங்கிலி மன்னன் நினைவு நாளில் உறுதி பூணுவோம்.

இதற்காக எதிர்வரும் 06.06.2026 சங்கிலியன் தோப்பில் காலை ஒன்பது மணி முதல் மாலை 3.30 மணி வரை இடம்பெறவுள்ள சங்கிலிய மன்னனின் 407ஆவது நினைவு தின விழாவில் சைவத்தமிழ் மக்கள் திரண்டு வந்து கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். அங்கு இடம்பெறும் கண்காட்சியில் உள்ள மாவீரன் சங்கிலியனின் வீரம் செறிந்த வரலாற்றுப் பதிவுகளைக் கண்டு கொள்ள வேண்டும். சங்கிலியனின் நினைவு தின விழாவின் ஊடாக எமது அடுத்த சந்ததிக்கு வீர வரலாறுகள் கைமாற்றப்பட வேண்டும். சங்கிலியன் போன்று அனைத்து சைவத்தமிழ் மக்களும் சைவம் காக்க புறப்பட வேண்டும். அதுவே! சங்கிலிய மன்னனுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

**சைவப்புலவர் N.P.சிறிந்திரன்,**
**செயலாளர்,**
**சங்கிலி மன்னன் நினைவு தினக்குழு.**

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி வீர கத்திப் பிள்ளையார்தேவஸ்தான பராபவ வருஷ பிரம்மோற்சவத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை கணபதி ஹோமம் இடம் பெறவுள்ளது.

8 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வைரவர் உற்சவமும். தொடர்ந்து 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றமும் 20 ஆம் திகதி சனிக் கிழமை இரவு சப்பறமும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இரதோற்வமும் 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், செவ்வாய்க் கிழமை இரவு பூங்காவனமும் இடம்பெற வுள்ளது.

அத்துடன் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை வைரவர், வீர பத்திரர் பொங்கலும் நடைபெறவுள்ளதென ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார்.(3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 700 | 500 | 600 | 600 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | -- | 200 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 300 | 650 | 600 | 600 | 520 |
| தக்காளி | 650 | 900 | 500 | 600 | 800 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 200 | 150 | 200 | 200 | 130 |
| கோவா | 250 | 350 | 300 | 260 | 350 | -- | 350 |
| கரட் | 400 | 460 | 500 | 350 | 500 | 500 | 480 |
| பூசணி | 120 | 120 | 100 | 100 | 150 | -- | 85 |
| புடோல் | 300 | 250 | 200 | 200 | 350 | 250 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 80 | 150 | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 450 | 400 | 240 | 380 |
| பெரிய வெங்காயம் | 280 | 220 | 250 | -- | 250 | -- | -- |
| பாகற்காய் | 1600 | 2400 | 1000 | 1500 | 2400 | -- | -- |
| வெண்டக்காய் | 250 | 150 | 300 | 150 | 400 | 200 | 230 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 300 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 700 | 600 | 300 | 450 | 400 | 500 | 300 |
| லீக்ஸ் | 400 | 480 | 500 | 400 | 450 | -- | 430 |
| பீற்றூட் | 500 | 450 | 400 | 350 | 500 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 600 | 350 | 500 | 500 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 600 | 450 | 1000 | 600 | 800 |
| போஞ்சி | 700 | 700 | 800 | 600 | 600 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 500 | 350 | 400 | -- | 500 | -- | -- |
| கீரை – 1 பிடி | 150 | 120 | 200 | 110 | 200 | -- | 100 |
| தேசிக்காய் | 850 | 500 | 400 | 550 | 600 | 500 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 120 | 80-120 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600 | -- | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 280 | 200 | 180 | 250 | 300 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 120 | 80 | 100 | -- | 80 | -- | 50 |
| ஈரப்பலா | -- | -- | 150 | -- | 300 | -- | -- |

# இராசிபலன்

06.06.2026
வைகாசி 23 , சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 11.06 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 4.43 மணிவரை
சுப நேரம் -2.52-4.22 மணிவரை
இராகு காலம் 8.52-10.22மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம்

**வளவன்**

**மேஷம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**துலாம்**
புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும்.

**மகரம்**
வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாளுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், குடும்ப மகிழ்சி கூடும், சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்**
உடல் நலனில் கவனம் தேவை, நட்பு பகையாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, செயற்பாடுகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கௌரவக்குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி**
பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**மீனம்**
பிரியமானவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**உற்சாகம் மிகுந்தவன் எதிரிக்கு அஞ்சமாட்டான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கார்பன் தடம்; பூமியின் சுமை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

நாம் அன்றாடம் செய்யும் ஒவ்வொரு செயலும் பூமியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தத் தாக்கத்தை அளவிட உதவும் ஒரு முக்கியமான அறிவியல் அளவுகோல்தான் கார்பன் தடம். ஒரு தனிநபர், நிறுவனம், அல்லது ஒரு நாடு வெளியிடும் பசுமை இல்ல வாயுக்களின் மொத்த அளவே கார்பன் தடம் என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக, இது கார்பன் டை ஆக்ஸைடுக்கு சமமான அளவுகளில் கணக்கிடப்படுகிறது.

நாம் சுவாசிக்கும் காற்றைப் போலவே இயல்பானதாகத் தோன்றினாலும், நாம் பயன்படுத்தும் பொருட்கள், பயணிக்கும் தூரம், உண்ணும் உணவு என ஒவ்வொன்றும் நமது கார்பன் தடத்தைப் பெருக்குகின்றன.

**1. கார்பன் தடம் என்றால் என்ன?**

கார்பன் தடம் என்பது நாம் வெளியிடும் கார்பன் டை ஆக்ஸைடு மட்டுமல்ல மீத்தேன் நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற பிற பசுமை இல்ல வாயுக்களின் தாக்கத்தையும் உள்ளடக்கியது. இந்த வாயுக்கள் பூமியின் வளிமண்டலத்தில் ஒரு போர்வையைப் போலச் செயற்பட்டு, சூரியனின் வெப் பத்தை வெளியேற விடாமல் தடுத்து, புவி வெப்பமடைதலுக்கு வழிவகுக்கின்றன.


**கார்பன் தடம் உருவாகும் முக்கிய வழிகள்:**

♦ **ஆற்றல் உற்பத்தி:** நிலக்கரி, பெற்றோலியம் போன்ற புதைபடிவ எரிபொருட்களை மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்துவது.

♦ **போக்குவரத்து:** வாகனங்களில் பெற்றோல், டீசல் பயன்படுத்துவது.

♦ **தொழில் துறை:** சிமெண்ட், இரும்பு போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் வெளியாகும் வாயுக்கள்.

♦ **வேளாண்மை:** கால்நடைகள் வளர்ப்பு மற்றும் இரசாயன உரப் பயன்பாடு.




**2. கார்பன் தடம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

கார்பன் தடம் என்பது ஒரு சிக்கலான கணக்கீடு. ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படும் ஆரம்ப நிலை முதல் அது பயன்படுத்தப்பட்டு அழிக்கப்படும் இறுதி நிலை வரை உள்ள அனைத்து நிலைகளிலும் வெளியாகும் வாயுக்களின் மொத்தத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

கார்பன் தடம் ={மொத்த உமிழ்வு} - {உறிஞ்சப்பட்ட அளவு}

எடுத்துக்காட்டாக நாம் வாங்கும் ஒரு புதிய கைப்பேசி தயாரிக்கத் தேவைப்பட்ட மூலப்பொருட்கள் தொழிற்சாலையில் செலவிடப்பட்ட மின்சாரம் உலகெங்கிலும் அதை எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்ட கப்பல்/விமானம் மற்றும் அது பயன் பாட்டில் இருக்கும் போது செலவிடும் ஆற்றல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது.

**3. கார்பன் தடத்தைக் குறைப்பதன் அவசியம்**

கார்பன் தடம் அதிகரிப்பது காலநிலை மாற்றத்தை மேலும் தீவிரமாக்குகிறது. இதனால் ஏற்படும் முக்கிய விளைவுகள்:

♦ **வெப்பநிலை உயர்வு:** பூமியின் சராசரி வெப்பநிலை அதிகரித்து உச்சகட்ட வெப்ப அலைகளை உருவாக்குகிறது.

♦ **பனி உருகுதல்:** துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்வதற்கு வழிவகுக்கிறது.

♦ **இயற்கை சீற்றங்கள்:** வெள்ளம் வறட்சி சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

♦ **உயிரினப் பன்மய இழப்பு:** பல தாவரங்கள் மற்றும் விலங்குகள் தங்கள் வாழ்விடங்களை இழக்க நேரிடுகிறது.

**4. தனிநபர்கள் செய்யக் கூடியவை**

♦ **ஆற்றல் சேமிப்பு:** வீட்டில் மின்விளக்குகள் மற்றும் மின்சாதனங்களை அணைப்பது விளக்குகளைப் பயன்படுத்துவது.

♦ **பொதுப் போக்குவரத்து:** தனிப்பட்ட வாகனப் பயன்பாட்டைக் குறைத்து பொதுப் போக்குவரத்து அல்லது மிதி வண்டிகளைப் பயன்படுத்துவது.

♦ **பசுமை ஆற்றல்:** சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஆதரிப்பது.

♦ **நுகர்வு குறைப்பு:** தேவையில்லாத பொருட்களை வாங்குவதைத் தவிர்ப்பது. மீண்டும் பயன்படுத்துவது மற்றும் மறுசுழற்சி செய்வது.

♦ **உணவுப் பழக்கம்:** உள்ளூரில் விளைந்த பருவ கால உணவுகளை உண்பது மற்றும் இறைச்சி நுகர்வைக் குறைப்பது (குறிப்பாக மாமிசம்).

கார்பன் தடம் என்பது வெறுமனே ஒரு சுற்றுச்சூழல் சொல் அல்ல. அது நமது பூமியின் எதிர்காலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு குறியீடு. நம்முடைய சிறிய அன்றாடத் தேர்வுகள்கூட உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொருவரும் தங்கள் கார்பன் தடம் சுழலைக் குறைப்பதில் பொறுப்புடன் செயற்பட்டால், நாம் நமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் பசுமையான உலகத்தை விட்டுச் செல்ல முடியும். இது அறிவியல் சவாலைத் தாண்டி, மனிதகுலத்தின் கூட்டுப் பொறுப்பாகும்.

**அபர்ணா ஞானசேகரம்**
**ஆராய்ச்சி உதவியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1058





ஆகா! ஜோதிடருக்கு உண்மையில் ஜோதிடம் தெரியுமா, ஜோதிட சாஸ்திரத்தில் உண்மை உண்டா என்பதையும் இச்சமயத்தில் பரிசோதித்துப் பார்த்து விடலாம்.

அம்மன் கோவிலையும், ஜோதிடர் வீட்டையும் பழுவேட்டரையர் அணுகிச் சென்றார். கோவிலுக்கு முன்னாலிருந்த நெடிய பெரிய மரம், புயலில் முறிந்து விழுந்து கிடந்தது. முதலில் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அடுத்தாற் போல் கோவிலை அடுத்து நின்ற இரட்டைக் குதிரை பூட்டிய ரதத்தின் பேரில் அவருடைய பார்வை விழுந்தது. அது விசித்திரமான அமைப்புள்ள ரதம். அந்த ரதத்தின் மேற்பகுதி ஓர் ஓடத்தைப் போல் அமைந்திருந்தது. வெள்ளம் வரும் காலங்களில் அவசரமாகப் பிரயாணம் செய்ய நேர்ந்தால் இம்மாதிரி ரதங்களை உபயோகப்படுத்துவார்கள். பெரிய நதிகளைக் கடக்கும் போது, திடீரென்று நதியில் வெள்ளம் அதிகமாகி விட்டால் ஓடத்தை ரதத்திலிருந்து தனியாகக் கழற்றி விடலாம் குதிரைகளை அவிழ்த்து விட்டால் அவை நீந்திப் போய்க் கரை ஏறி விடும். ரதத்தில் வந்தவர்கள் ஓடத்தை தள்ளிக் கொண்டு போய்க் கரைசேரலாம்.

இத்தகைய ரதங்கள் சோழ நாட்டில் அபூர்வமாகத் தான் உண்டு. இது யாருடைய ரதமாயிருக்கும்? அரண்மனை ரதமாயிருக்க வேண்டும் அல்லது முதன் மந்திரியின் ரதமாக இருக்க வேண்டும். இதில் வந்தவர்கள் இப்போது ஜோதிடர் வீட்டுக்குள் ஜோதிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் போலும்! அவர்கள் யாராக இருக்கும்? ரத சாரதியைக் கேட்கலாமா? வேண்டாம்! அவன் தம்மைப் பார்த்து மிரண்டு போனாலும் போவான்.

ஜோதிடர் வீட்டுக்குள் நேரே பிரவேசித்துப் பார்த்து விடுவதே நலம். அங்கே வந்திருப்பவர்கள் யாராயிருந்தாலும் இந்த ரதத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டால், கடம்பூர் திரும்பிச் செல்ல வசதியாக இருக்கும் அல்லவா?

ஜோதிடர் வீட்டு வாசலுக்குப் பழுவேட்டரையர் வந்த போது உள்ளே பெண் குரல்கள் கேட்டன. கிழவருக்கு தூக்கி வாரிப் போட்டது. யாருடைய குரல்? ஏன்? இளைய பிராட்டி குந்தவை குரல் போல அல்லவா இருக்கிறது? அவள் எதற்காக இங்கே வந்தாள்? இந்தச் சமயம் பார்த்தா வரவேண்டும்? முதலில் இப்படி எண்ணியவர் உடனே மனத்தை மாற்றிக் கொண்டார். அவ்விதமானால், இளைய பிராட்டியாக இருந்தால், ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. குந்தவை தேவியின் காதில் விஷயத்தைப் போட்டு விட்டால் தம்முடைய பாரமே நீங்கியது போலாகும்.


அவளுடைய தந்தைக்கும், தம்பிக்கும் நிகழக் கூடிய ஆபத்தைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லிவிட்டால், பிறகு அந்தச் சாமர்த்திய சாலியான பெண் வேண்டிய முன் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வாள். பிறகு தாம் நிம்மதியாகத் திரும்பிக் கடம்பூருக்குப் போகலாம். அங்கேயல்லவா தம்முடைய முக்கியமான கடமை இருக்கிறது?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆலமரமும் வௌவால்களும்



"உன்னோட தோற்றத்தைப் பார்த்து கூடத்ததான் மற்றவர்கள் அருவெறுப்பு அடையிறார்கள்! அதுக்காக நான் உன்னை வெறுக்கவா செய்யுறேன்?". என்ற வார்த்தைகள் மரத்திற்கு வாய் வரை வந்து விட்டது. பிறரின் தோற்றத்தை வைத்து பரிகசிப்பது இழிவான செயல்! அது மனதைக் காயப்படுத்தும்! என மரம் நினைத்தது. ஆந்தை குறுகிய எண்ணத்துடன் பேசுகிறது என்பதை மரம் புரிந்து கொண்டது. அது பதில் ஏதும் சொல்லாமல் புன்னகைத்தது.

இனி மரத்திடம் பேசி பயனில்லை என்பதை ஆந்தை புரிந்து கொண்டது. அந்த மரத்தை ஒட்டி விவசாயி ஒருவரின் நிலம் இருந்தது. விவசாயி தினமும் நிலத்திற்கு வருவார். அங்கே வேலை செய்து விட்டு மரத்தடியில் ஓய்வெடுப்பார். மரத்தடியில் திண்ணைக்கல் ஒன்று உண்டு. ஆந்தை அந்த மரத்தில் வசிப்பதும் வௌவால்கள் புதிதாக அங்கு வந்து அடைவதும் அவருக்குத் தெரியும். ஒரு நாள் ஆந்தை அவரிடம் சென்று பேச்சுக் கொடுத்தது.

"இந்த வௌவால்களை இங்க இருந்து விரட்டுறதுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க!" என்றது ஆந்தை.

"எதுக்காக வௌவால்களை இங்க இருந்து விரட்ட வேண்டும் என்று நினைக்கிறாய்?" என்று கேட்டார் விவசாயி,

"இவை இங்க வந்ததுல இருந்து இந்த இடமே சுத்தம் இல்லாமப் போச்சு! நீங்க படுத்து ஓய்வெடுக்குற திண்ணைக் கல்லைக் கூட எச்சம் போட்டு அசுத்தம் பண்ணிருதுங்க! தினமும் நீங்க அதை சுத்தம் பண்ணிட்டுத்தான் ஓய்வெடுக்குற மாதிரி இருக்கு" என்றது ஆந்தை.

ஆந்தை தவறான எண்ணத்துடன் இருப்பதை விவசாயி புரிந்து கொண்டார். அவர் அதன் மனஓட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டி வேண்டுமென்றே பேச்சுக் கொடுத்தார். "வௌவால்களை விரட்டுறதுனா எப்படி விரட்டுறது?" என்று ஆந்தையிடம் கேட்டார்.

"வௌவால்களுக்கு வெடிச் சத்தம்னா அறவே ஆகாது! நீங்க ஒரு இரண்டு மூன்று நாள் இந்த மரத்தடில் அதுக அடைஞ்சு இருக்குற நேரமாப் பாத்து வெடி போடுங்க! அதிர்ச்சி அடைஞ்சு இந்த இடத்தை விட்டுக் காலி பண்ணிட்டுப் போயிரும்ங்க!" என்றது ஆந்தை! (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சொந்தப் பனை தறிக்க பட்டபாடு கேண்மின்களே!

சட்டவிரோதம் யாவும்
சலனமின்றி நடக்குது – இங்கே
பட்டப் பகலில் – நடுநிசியில்
கள்ளமண்ணும் கற்பகதருவும்
கடத்தப்படும் காரியம் கச்சிதமாய்...
பனை வளர்த்தவன் அலைகிறான்
பாவியாய் பனையில்...

பாண்டவர் கேட்ட ஐந்து வீடு போல்
அவன் கேட்டது ஐந்து பனைமரம்
கட்டிய வீட்டை சற்று நீட்டவே – அந்தோ!
படிவத்தை பக்குவமாய் நிரப்பி
பாங்குடனே விதானையிடம் சென்று
கண்ணியமாய் ஒப்பம் கேட்க
காணி பார்க்கவே ஒரு வாரம் ஆகுமாம்
கடந்தது ஒரு வாரம்
ஜிஎஸ் இன் வாசல் படியேற,
உன் காணியில் உன் பனை தறிக்க
உனக்கே நீ உறுதி மொழி
தருக என்றார் அவர்
இஃதென்ன புதுசு என்று கேட்க,
ஆவல் எம்மிடத்தில் மேலிட்டாலும்
காலமெல்லாம் கழுத்தறுப்பு
நடக்குமல்லோ ஆதலால்
அமைதி கொண்டார் பனை வளர்த்தார்

காமெல்லாம் ஜிஎஸ் இன்
கந்தோருக்கு அலைகின்ற
விதியெப்போ தீருமென்று
விக்கித்த யோசனையும்
கனத்த காற்றும் கடும் வெயிலும்
காலக்கொடுமையாய் ஒருசேர,
பேருந்து மனைதனிலே
களைப்பாற, கண்ட ஒருவர்
அண்ணே! என்றார் அன்புடனே

உடல் களைத்து முகம் சோர்ந்து
ஏது நடந்தது என்ன சங்கதி
கப்பல் கவுண்டதோ!
கடும் உறவினர் யாரேனும்
ஈரானில் உளரோ! என்றார் அவர்
ஒன்றுமில்லை காணும்
யான் கட்டிய சிறு வீட்டை
மெல்லியதாய் நீட்டவே விருப்புற்று
ஐந்து பனைமரம் தறிக்க
அனுமதி எடுப்பதில் எத்தனை பாடு

யான் பட்டபாடு அத்தனையும் கூறி
நெருக்குண்டேன்; தள்ளுண்டேன்
நீள் பசியால் சுருக்குண்டேன்
சோறு மட்டும் உண்டிலேன் – என்ற
நம் மூதாட்டி ஔவைபோல்
பனை தறிக்கும் அனுமதி மட்டும்
பெற்றிலேன் என்றேன் யான்
வந்தவன் சிரித்த சிரிப்பொலி
பளை பேருந்து நிலையமெங்கும்
பாரிய இடி முழக்கமாய் கேட்க
எனக்கே ஒரு மாதிரியாய் போயிற்று
எங்கே? எத்தனை வேண்டும்
முழுசாக, முழுமாக, வளையாக,
பாச்சு மரமாக எத்தனை... சொல்லுக

சுண்டுவதற்குள் சொல்லிய இடம்
வந்தேகும் என்றான் அவன்
கடவுளே! பண்பாட்டியல் எம்.ஏ யிலும்
இந்தப் பாடம் படித்ததில்லையே
பாழ்பட்டுப்போன பட்டம்
சொந்த வீட்டுக்கே சொந்தப் பனையை
சொந்தமாக்க உதவவில்லையே
தம்பி உன் தொலைபேசி இலக்கம் தா!
என் விலாசம் தர்மக்கேணி
என்றுரைத்து விடைகொண்டேன்
விடையேறும் பெருமானை நினைந்துருகி!

# போதைவஸ்து கடத்திய பெண்ணின் 30 மில்லியன் சொத்துக்கள் முடக்கம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைச் சேர்த்த குற்றச்சாட்டின் கீழ், கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் சுமார் 300 இலட்சம் (30 மில்லியன்) ரூபா பெறுமதியான சொத்துக்களை முடக்குவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான குறித்த பெண், தனது கணவருடன் இணைந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு, அதன் மூலம் சட்டவிரோதமான முறையில் பெருமளவு சொத்துக்களை சேர்த்துள்ளதாக பொலிஸ் மா அதிபரினால் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது குறித்த பெண்ணின் இரண்டாவது கணவரால் போதைப் பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்ட பணத்தைக் கொண்டு தொட்டலங்க பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 1.30 பரப்புடைய காணி மற்றும் 0.75 பேர்ச்சர்ஸ் காணியுடன் கூடிய மூன்று மாடி வீடு என்பன கண்டறியப்பட்டன.

இதனை அடுத்து பணச் சுத்திகரிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த சொத்துக்களை முடக்குவதற்கான உத்தரவு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# டயஸ் போராவை மகிழ்விக்க அரசியல் பழிவாங்கல்

## அரசு செய்வதாக சமன்பிரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், நாட்டிற்காக அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் சுரேஷ் சலேயை அதே சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைத்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் சுரேஷ் சலே நேற்றைய தினம் நீதிமன்றத்தில் பிணை கோரியிருந்த போது, அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்கள் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போது கூட அவர்களுக்கு எந்தவொரு உடல்ரீதியான சித்திரவதைகளும் செய்யப்படவில்லை. ஆனால் சுரேஷ் சலேவுக்கு இவ்வாறு நடந்திருக்குமாயின் அதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும.

மேலும் தமிழ் டயஸ் போராவை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்றார்.(ந-7)

# இலங்கை சிறையிலுள்ள மீனவரை விடுவிக்க ஆவன செய்க

## புதுச்சேரி முதலமைச்சர் கடிதம்

(புதுச்சேரி)

இலங்கை சிறையிலுள்ள காரைக்கால் கடற்றொழிலாளரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கடலில் தொழில் செய்துகொண்டிருந்த வேளையில் புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்த 7 கடற்றொழிலாளர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்களது இயந்திரப் படகையும் பறிமுதல் செய்திருந்தனர்.

இதுதொடர்பாக கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி முதலாவது கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கைது நடவடிக்கையில் காரைக்கால் டி. ஆர் பட்டினத்தைச் சேர்ந்த பிரதீப் சூரியமூர்த்தி (வயது - 29) என்பவரைத் தவிர ஏனைய 6 கடற்றொழிலாளர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில்தான் திருமணமான பிரதீப் சூரியமூர்த்திக்கு, தொடர்ச்சியாக மருத்துவ வசதிகள் தேவைப்படும் வயதான பெற்றோர்கள் உள்ளனர். இவர்களைப் பராமரிப்பதற்கு குடும்பத்தில் வேறு எவரும் இல்லை.

எனவே, மனிதாபிமான அடிப்படையில் கடற்றொழிலாளர் பிரதீப் சூரியமூர்த்தியை விரைவில் விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-7)

# லாஃப்ஸ் எரிவாயுவின் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

லாஃப்ஸ் எரிவாயுவின் ஜூன் மாத விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படாது என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 6,245 ரூபாய்க்கும் 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 2,500 ரூபாய்க்கும் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# வங்கியில் ரூ.3 ½ கோடி கொள்ளை

## உதவி முகாமையாளர் உட்பட இருவர் கைது

(ஹொரணை)

ஹொரணை பகுதியிலுள்ள அரச வங்கி ஒன்றில் மூன்றரைக் கோடி ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், அந்த வங்கியின் உதவி முகாமையாளர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி பிற்பகல் 2.55 மணியளவில் வங்கியின் ஊழியர் ஒருவர், வங்கியின் பின்பக்கக் கதவினால் இரண்டு பணப்பைகளை எடுத்துச் சென்றபோது, அங்கு வந்த நபர் ஒருவர் அந்த இரண்டு பணப்பைகளையும் பலவந்தமாகப் பறித்துக் கொண்டு தப்பியோடியிருந்தார்.

அப்பணம், சம்பந்தப்பட்ட வங்கியின் ஏரிஎம் (ATM) இயந்திரங்களில் வைப்புச் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட 30.5 மில்லியன் ரூபாய் (3 ½ கோடி) பணமாகும்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த வங்கியின் உதவி முகாமையாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை

## வரவும் செலவும் சேர்ந்து வரும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**உள்ளத்தில் நினைத்ததை செய்யும் கும்ப இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், 26.05.2026 அன்று 6ஆம் இடத்திற்கு வருகிறார். அது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிக்கும் இடமாகும். எனவே எதிர்ப்புக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கை அமையலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. ஒரு கடனை அடைக்க, மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், 6 ஆம் இடத்திற்கு செல்கிறார். 6 இல் குரு வந்தால் ஊரில் பகை என்பது பழமொழி.உங்கள் இராசிக்கு தன -லாபாதிபதியான குரு. 6ஆம் இடத்திற்கு வரும்போது தன விரயம் ஏற்படும். பொறுமையோடும், நிதானத்தோடும் செயற்படவேண்டிய தருணம் இது. ஆரோக்கிய தொல்லை, மனக்குழப்பம், கடன் சுமை போன்றவை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. குருப்பெயர்ச்சிக்கு முன்னதாக குருவிற்குரிய சிறப்பு தலங்களுக்கு சென்று வருவதோடு, ஒவ்வொரு வியாழக் கிழமையும் விரதம் இருந்து குரு பகவானை வழிபட்டால் நல்லது நடக்கும்.

**வெற்றி தரும் குருவின் பார்வை**

சுப கிரகமான குரு பகவான் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு வரும் போது 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்கள் புனிதமடைந்து அதற்குரிய பலன்கள் கிடைக்கும். குடும்ப ஸ்தானம் எனப்படும் 2ஆம் இடத்தை குரு பார்ப்பதால், குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். பணப் பற்றாக்குறை அகலும் கொடுக்கல்- வாங்கலில் இருந்த மந்த நிலை மாறும், வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்காமலே உயர் பதவிகள் கிடைக்கலாம்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால், தொழில் முன்னேற்றம் ஏற்படும். இதுவரை மூடியிருந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்துவீர்கள். எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும். புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு, தொழிலை விரிவு செய்துகொள்வீர்கள். எதிர்பார்த்தபடியே இலாபம் கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள், தனித்து இயங்க வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்கள் வெளியில் வந்து சுயமாக தொழில் தொடங்க முன்வருவர்.

குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் நீண்ட தூரப் பயணத்திற்கான வாய்ப்பு உருவாகும். புதிய வாகனம் வாங்குவதற்கான நேரம் இது. அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். என்றாலும் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். வெளிநாடு சென்று பணி புரியவேண்டும் என்று ஆசை உள்ளவர்களுக்கு, அதற்கான அழைப்புகள் வரக் கூடும். சுய ஜாதகம் பலம் பெற்று இருந்தால், அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

26.5.2026 முதல் 10.6.2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு என்பதால், இது ஒரு பொற்காலமாக அமையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்கள் செயற்பாட்டைப் பார்த்து வியப்பார்கள். புனிதப் பயணம் அதிகரிக்கும். புகழ் மிக்கவர்கள் உங்கள் பின்னணியில் இருந்து, புதிய பாதையை ஏற்படுத்தித் தருவர்.

11.6.2026 முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, குடும்பச் சுமை கூடும். உங்கள் இராசிக்கும், விரய ஸ்தானத்திற்கும் அதிபதியான சனியின் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கையில், கொடுக்கல்-வாங்கலில் பிரச்சினை உருவாகும். கடுமையாக முயற்சித்தும் ஒரு சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம். மன வருத்தம் அதிகரிக்கும். வீடு மாற்றம் இடமாற்றம் இனிமையாக அமையாது. பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைப்பதும் அரிது. வாகன பழுதுகளால் வாட்டம் ஏற்படும். தேக நலனுக்காக செலவு செய்ய வேண்டியதிருக்கும்.




11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும்போது, நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கும். உங்கள் ராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியானவர் புதன் என்பதால், நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும் காலம் இது. குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது குறை கூறுவர். திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லும். உற்றார் உறவினர்கள் உங்களுக்கு பகையாகலாம். ஒவ்வொரு காரியத்திலும் "செய்யலாமா? வேண்டாமா?" என்ற குழப்ப நிலை ஏற்படும்.

20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக் காலில் கேது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக் கும் போது, நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 1,3, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர். பூர்வீக சொத்து பிரச்சினை அகலும். நீண்டதூர பயணங்கள் நிலையான வருமானத்திற்கு வழிவகுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரியின் ஆதரவு திருப்தி தரும்.

**ராகு - கேது பெயர்ச்சிக் காலம்**

13.11.2026 அன்று ராகு - கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. உங்கள் இராசிக்கு விரயஸ்தானத்தில் ராகுவும், 6ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த ராகு, விரயஸ்தானத்திற்கு வருவதால் வீடு மாற்றம், இட மாற்றம் உருவாகும். வரவை காட்டிலும் செலவு கூடும். பொருளாதாரத்தில் சமநிலை இருக்காது. எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். யாருக்கேனும் நன்மை செய்தாலும் அது தீமையாக தெரியும் நேரம் இது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

தேய்பிறை அஷ்டமி தோறும் பைரவரை வழிபட்டு வருவது நல்லது. அம்மனையும் வழிபட்டு வந்தால் வளர்ச்சி அதிகரிக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக பண நெருக்கடியும், மனக்கவலையும் அதிகரிக்கும். எதிலும் ஸ்திரத்தன்மை ஏற்படாது. கணவன் - மனைவிக்குள் புரிந்துகொண்டு செயற்பட்டால் இல்லறம் நல்லறமாக அமையும். குடும்பத் தகவல்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டாம். எதையும் யோசித்து செய்யவேண்டிய நேரம் இது. பெற்றோரின் ஆதரவு திருப்தி தரும். சிம்ம குருவின் பெயர்ச்சிக்கு பின்னர், உடன் பிறப்புகள் வழியிலும், பிள்ளைகள் வழியிலும் நல்ல தகவல் கிடைக்கும்.

**குருவின் வக்கிர காலம்**

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்கிரம் பெறும் போது, மிகக் கவனமாக செயற்படவேண்டும். பண நெருக்கடி அதி ரிக்கும். பாசமிக்கவர்கள் பகையாக மாறுவர். பற்றாக்குறை காரணமாக கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பயணங்களால் அலைச்சல் ஏற்படுமே தவிர, எந்த ஆதாயமும் கிடைக்காது. நல்ல சந்தர்ப்பங்கள் கை நழுவிச் செல்லும். வீண் விவகாரங்கள் வீடு தேடி வரலாம். தொழில் மற்றும் உத்தியோகத்தில், உடன் இருப்பவர்களால் உபத்திரவங்கள் ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரமானியத்...

திணைக்களத்தில் நேற்று (05) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்மூலம் 502,836 பேர் இந்த மானியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இதற்காக அரசாங்கத்தினால் 10,947 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதுடன் அந்தத் தொகை ஒரே தடவையில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும். சந்தை விலை எவ்வளவுதான் அதிகரித்தாலும் இந்த முழுப் பருவக் காலத்திலும் நெல் விவசாயத்திற்குத் தேவையான ஒரு மூடை யூரியா உரத்தை 10,200 ரூபாய்க்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய விவசாய சேவை நிலையங்கள் ஊடாக இந்த விலையில் உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். (ந-7)

## மரணித்தோர்...

குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

இதன்படி இந்தத் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை மேலும் 5 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து நடந்த வேளையில் இந்த முதியோர் இல்லத்தில் 72 பேர் தங்கியிருந்தனர் என்பதுடன் தீ விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் 10 பேர் கட்டிடத்திற்குள்ளேயே தீயில் கருகி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தீவிரமடையும்...

யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அதற்கமைய இன்று சனிக்கிழமை (6) மாலை 3.30 மணி வரை வடக்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏதேனும் அவசர அனர்த்த நிலைமைகள் ஏற்படின், உடனடியாகப் பிரதேச அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 117 என்ற அவசர உதவி எண்ணை அழைக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ந-7)

## விமல் வீரவன்ஸ...

ணங்கள் மற்றும் எரிபொருள் என்பன முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் முறைப்பாடு தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் நிதிக்குற்றப்புலனாய்வுப் பிரிவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-7)

## அதிபர் சேவை...

தளத்தின் ஊடாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையானது கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வடக்கை...

(Battery Storage Systems) நேற்று (05) யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த மின்கலங்கள் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நிறுவப்படவுள்ள நிலையில் அவற்றின் வருகை மற்றும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் [illegible] உறுப்பினர் [illegible] நேரில் சென்று பார்வையிட்டார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான முக்கிய முன்னேற்றமாக இந்தத் திட்டம் கருதப்படுகின்றது. (ந-7)

## மின்சாரத்தை...

மின்சாரத்தை சேமித்து நெருக்கடியான நேரத்தில் பயன்படுத்தும் திட்டம் இலங்கையில் முதன்முதலாக நேற்று வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மின்சாரத்தைச் சேமித்து நெருக்கடியான நேரங்களில் பகிரத்தக்க சேமிப்பு கட்டமைப்பை இலங்கையில் நிறுவும் திட்டத்தின் கீழ் வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் மின்கலக் கட்டமைப்பை நிறுவும் நடவடிக்கை இடம் பெற்று வந்தது.

நுகர்வுக்கு மேலதிகமான மின்சாரத்தினை சேமித்து வைத்து பயன்படுத்துவதைப் பிரதான நோக்கமாக கொண்டு இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக இந்தச் செயற்றிட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,250)

## கிளி...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் அவரைக் கைது செய்துள்ளமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ந-7)

## 52ஆம்...

தியாகி பொன். சிவகுமாரனின் 52ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் சிவகுமாரனின் உருவச்சிலை உள்ள உரும்பிராயில் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (05) காலை 8 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில்பொதுஈகச் சுடரினை பொன்.சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி அவர்கள் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து [illegible] முக்கியஸ்தர்கள் சுடர் விளக்குகளை ஏற்றி வைத்தனர். தியாகி பொன்.சிவகுமாரன் உள்ளிட்ட இன விடுதலைக்காக தம் இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகள், பொதுமக்களை நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. சிவகுமாரனின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று திரண்டு சிவகுமாரனின் நினைவேந்தலை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 6209 — J 1 5 0 5 7 5
அத சம்பத — J 0 5 7 5 — சீட்டிழுப்பு 0784
சுப தவசக் — திகதி 2026.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0325 — கடகம் 05 59 66 — 8541
தன நிதானய — திகதி - 2026.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 2239 — E 05 16 58 66 E
மெகா பவர் — திகதி 05/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2557 — R 02 01 55 62 80
ஜய — திகதி 2026.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0477 — S 6 9 6 3
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4451 — சீட்டிழுப்பு திகதி 05.06.2026 — L 12 30 59 63
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1518 — துலாம் 06 09 11 43 துலாம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — 05.06.2026 — வெற்றி வாரம் 0917 — U 8 0 1 4 9 4 — அடுத்த சுப்பர் நகப்பொட் ரூ.20,639,803.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3183 — 25000 பணப் பரிசு 32443 — சீட்டிழுப்பு திகதி 2026.06.05 — தினம் வெள்ளிக்கிழமை — 25 28 52 72 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 131,548,040.80
சனிதா — திகதி 05.06.2026 — வெற்றி வாரம் 5344 — 12 20 45 73 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,598,232.00 — 80320
சசிரி — சீட்டிழுப்பு வாரம் 1013 — சீட்டிழுப்பு திகதி 05.06.2026 — வெள்ளிக்கிழமை — 05 23 35 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,731,960.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4895 — சீட்டிழுப்பு திகதி 05.06.2026 — தினம் வெள்ளிக்கிழமை — 07 27 28 34 கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,365,108.40
G 26 39 56 63 70 — 2359 — 05.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 284,994,261.20
அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 3009 — சீட்டிழுப்பு திகதி 2026.06.05 — 06 09 38 70 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,665,564.80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மின் கட்டணம் விரைவில் உயரும்

## ஐக்கிய ஒருங்கிணைந்த தொழிற் சங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் உலக சந்தை விலையை விட அதிக விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்வதால் மின்சாரக் கட்டணம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்காகவே தொடர்ச்சியான விலை உயர்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன் சுமையை சாதாரண மக்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதும் தற்போதைய விலை உயர்வுகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

போதிய எரிபொருள் கையிருப்பு இருந்தபோதும் தட்டுப்பாடு நிலவுவதாக ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டு, மூன்று வாரங்களுக்குள் மூன்று முறை எரிபொருள் விலை உயர்த்தப்பட்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜூலை மாதம் முதல் எரிபொருள் மானியங்கள் நீக்கப்படும் என தெரிவித்துள்ள நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜூன் மாதத்திலிருந்தே மானியங்கள் வழங்கப்படாது எனக் கூறியிருப்பது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக எதிர்காலத்தில் எரிபொருள் விலைகள் மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது. போக்குவரத்துச் செலவுகள் உயர்வதன் தாக்கமாக எரிவாயு விலைகளும் உயரக்கூடும்.

ஏற்கெனவே மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மின்சார உற்பத்திச் செலவுகள் மற்றும் எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி நீர்க் கட்டணத்தையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

(ந-7)


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுகள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்கின்றோம்

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-5789)

**V2 TRAVELS** 076 1410725, 0777 068 777
v2vacancies@gmail.com



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதான வீதியில் 07 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.**

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி முகப்புடன் மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒருபரப்பின் விலை 1,200, 000 (பன்னிரெண்டு இலட்சம்).
- பின்பகுதி இரண்டு பரப்பாகவும் ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் ஒரு பரப்பு எட்டு இலட்சம் முதல் ஆறு இலட்சம் வரை.
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த நிலம்.
- யாழ்.நகரில் இருந்து 4 Km தூரம். (2393)

**077 988 6389, 076 077 2674**



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Mx 3Kg |
| 1Kg கோதுமை மா | - 155/= | Mx 10Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 239/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 239/= | |
| 1Kg அரிசி மா | - 237/= | |
| 1Kg குத்தரிசி | - 250/= | |
| 1Kg உடையல் பச்சையரிசி | - 210/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 172/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 210/= | |
| 1Kg வெள்ளைநாடு | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 199/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | |
| 1Kg பால்பொன்னி | - 255/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2599/= | ~~3000/=~~ |
| 1Kg கடலை | - 347/= | |
| 1Kg பொன்னி | - 240/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

ரூ. 5000 ற்கு மேல் கொள்வனவு செய்து பரிசுகளை இலவசமாக பெற்றிடுங்கள்




காசு மூலமான கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.
வடமராட்சி, தென்மராட்சி டெலிவரி விநியோகங்களும் உண்டு.
டெலிவரி : 076 800 6500 (2395)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. **0777 8080 30**



## மணமகள் தேவை

U.K குடியுரிமை உடைய 1980ம் ஆண்டு பிறந்த விவாகரத்தான பொறியியலாளர் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு : இ.சபாரெத்தினம்

**Phone : 0044192382960 7 (U.K)**
**Viber : 00447411059950 (U.K)** (7789)



## இலத்திரனியல் மற்றும் அலுவலக பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், வடமராட்சி, மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பணிபுரிவதற்கு அனுபவம் உள்ள Electrician, CCTV, PC Technician மற்றும் Pc Operator/Data entry மற்றும் அலுவலக முகாமையாளர்கள் (பெண்கள்) தேவை. (Basic salary 65000/-)
பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம் .

**Digitec : 077 868 8517**
**0041791954727 (WhatsApp)** (2389)



## 45ஆம் நாள் நினைவுகள்



அமரர்
**குணபாலசிங்கம் பரமேஸ்வரி**

அன்பினால் அன்பிற்கோர்
அடையாளம் நீங்கள் அம்மா!
என்றுமே எங்களின்
நிலையான
சொந்தம் நீங்கள் அம்மா!

மலர்வு 21.06.1959 | உதிர்வு 23.04.2026

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்
செல்வபுரம்,
பளை. (2394)


## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

2. வதந்திகளும் அரசியல் நிகழ்ச்சிநிரல்களும் உங்களை பயன்படுத்த விடாதீர்கள். வெறுப்புப் பேச்சு பெரும்பாலும் வதந்திகள், தவறான தகவல்கள் மற்றும் சமூகங்களைப் பிரிக்க முயலும் அரசியல் நோக்கங்களால் இயக்கப்படுகிறது.

ஏதேனும் தகவலை பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:
இதை யார் உருவாக்கினர்? ஏன் உருவாக்கினர்? இதனால் யாருக்கு பயன்?

பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.
அமைதியைத் தெரிவு செய்யுங்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது. (7775)


## உயர்தர ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

விலை – 125/=

புறொயிலர் குஞ்சுகள், முட்டைக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
**078 584 5555** (7792)



## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :
**077 032 9088** (7734)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media